

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2025) தலைமைச் செயலகத்தில், மாலத்தீவில் 2.12.2025 முதல் 6.12.2025 வரை நடைபெற்ற 7வது கேரம் உலக போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி கீர்த்தனாவுக்கு ரூ.1 கோடி உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, விளையாட்டு வீராங்கனையின் தாயார் மற்றும் பயிற்சியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2025) தலைமைச் செயலகத்தில், மாலத்தீவில் 2.12.2025 முதல் 6.12.2025 வரை நடைபெற்ற 7வது கேரம் உலக போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி காசிமாவுக்கு ரூ.50 இலட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலையை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, விளையாட்டு வீராங்கனையின் பெற்றோர் மற்றும் பயிற்சியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2025) சென்னை, இராயப்பேட்டை நியூ காலேஜ் அரங்கத்தில் நடைபெற்ற, தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினரும், வழக்கறிஞருமான எஸ்.கே.நவாஸின் மகன் சையத் தன்விர் – ஹர்ஷியா ஆகியோரது திருமண விழாவில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜே.எம். ஆரூண், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு மாநில சிறுபான்மையின ஆணையத் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.





